தெணியான்

# பூம்பொழில்

Poom PoLiL



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்
தமிழ் இலக்கிய மன்ற
வெளியீடு

# BALASAROJA STORES

WHOLESALE MERCHANTS
&
ESTATE SUPPLIERS

*Dealers in:*

DRY FISH, GROCERY, RICE ETC.,

**6, Bazaar Street,**
**BADULLA.**

*Office:*

24, OLD BUTCHERS STREET,
COLOMBO-11.

*Telephone:* **78315**

*Bankers:*

**NATIONAL & GRINDLAYS BANK LTD.**
**BANK OF CEYLON, BADULLA.**

*Telegrams:* **"BALASAROJA"** *Telephone:* **445**

W. F. A. Veerasingam

தெணியான்

# பூம்பொழில்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

— பாரதி


மலர்: 1 பரிதாபி ஆண்டு - ஆனி 30 இதழ்: 2

13-7-72


## இந்த இதழில்


எங்கள் எண்ணம் 1—2

மன்றச் செய்திகள் —3

நினைவில் நிற்பவை —4

தமிழிலக்கியமும் - சாதி ஒழிப்பும் 5—10

பிரிவின் ஆற்றாமை —11

நெஞ்சிருக்கும் வரை 12—17

நினைவாஞ்சலி —18

மாக்சிம் கார்க்கியின் இலக்கியப்பணி 19—20

பூச்சியம் தானா 21—23

பிறந்தமண் அழுகிறது 24—26


## எங்கள் எண்ணம்

'பூம்பொழில்' - இரண்டாவது இதழில் காலடியெடுத்து வைத்துள்ளது. மன்ற அங்கத்தினர்களும் - ஏனைய அன்பர்களும் தமிழ் வளர்ச்சிப்பாதையில் இச்சஞ்சிகை சிறுகுழந்தை எனினும் கூட இதன் பேரில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர் என்பது புலனாகின்றது. இதன் வளர்ச்சி மேலும் வீறு நடை போடுவதற்குச் சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது. காகிதம், மை மற்றும் செலவுகள் 'விடம்' போல் ஏறியுள்ள இக் காலகட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்கு முடிந்தளவிற்கு ஆக்கபூர்வமான பணிகள் செய்யவேண்டும் என்ற குறிக்கோளிற்காக மன்ற அங்கத்தவர்களுக்கு இச்

சஞ்சிகையை இலவசமாக வழங்கி வருகின்றோம். இதன் வெளியீட்டுச் செலவிற்கு விளம்பரங்களை வழங்குவதன் மூலம் தொண்டு செய்யும் விளம்பரதாரர்களும் எம்மைப் பொறுத்தவரை தமிழின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுகின்றனர் எனின் மிகையாகாது. ஆகவே அவர்களுக்கு என்றும் நாம்கடப்பாடுடையோம். முதல் இதழுக்குக் கிடைத்த வரவேற்பு மேலும் சிறந்த முறையில் இவ்விதழை வெளியிடுவதற்கான ஊக்கத்தினை எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஈழம் பல நூற்றாண்டுகளின் பின் தன்னாதிக்கமுள்ள -சுயாதிபத்தியம் பொருந்திய குடியரசாகப் பரிணமித்துள்ளது. நாம், ஏறக்குறைய 25 ஆண்டுகளாக சுதந்திரம் பெற்றிருந்தும் கூட அன்னிய செல்வாக்கிலிருந்து விடுபட முடியவில்லை. அச்சுதந்திரமும் கூட ஈழத்திற்கு பெருமட்டமான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை; ஏனெனில் சமூக - பொருளாதார - அரசியல்-மொழியியல் துறைகளில் அன்னிய செல்வாக்கு பிரதிபலித்தமையை மறுப்பதற்கில்லை. இந்நிலையில் குடியரசின் தோற்றம் ஈழம்வாழ் மக்களின் குறிக்கோள்களை- உரி~~மைகளை~~ உரிமைகளை -பண்பாட்டுக் கருவூலங்களை பிரதிபலிப்பதாக அமையக் கூடிய சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. பல துறைகளிலும் ஈழம் தனக்கெனச் சிறப்பாக உரிய பாதையில் காலடியெடுத்து வைத்துள்ளது. பல இனமக்கள் வாழும் ஈழத்தில் சிறுபான்மையினரின் சுயநிர்ண உரிமைகளுக்கும் - தேசியப் பிரச்சனைகளுக்கும் - உட்கிடக்கைகளுக்கும் மதிப்புக் கொடுக்கப்படுமிடத்து "ஈழம் வாழ் மக்கள் யாவரும் ஒரு நாட்டின் குழந்தைகள்" என்ற கருத்து வலுவுற்று, தேசிய ஒருமைப்பாடும் - அதன் வழி நிரந்தரமான பொருளாதார முன்னேற்றங்களும் ஏற்பட இடமுண்டு.

அரசு, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் மூலம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள் ஆகியோருக்குப் பல வழிகளிலும் பரிசுகள் வழங்குதல் - உதவிகள் செய்தல் மூலம் ஆக்க பூர்வமான பணிகளைச் செய்ய இருப்பதாக அறிகின்றோம். இப்பணிகள் இலக்கிய வளர்ச்சிக்கு உரம் ஊட்டக் கூடியதாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

— ஆசிரியர் குழு

# மன்றச் செய்திகள்

முத்திங்கள் தோறும் வெளிவரும் 'பூம்பொழில்' - தமிழ் புத்தாண்டு தினத்தன்று — 13-4-72ல் வெளியிடப்பட்டது. எமது மன்றத்தின் முதல் வெளியீடாகிய இச்சஞ்சிகையை வெற்றிகரமாக வெளியிட உதவிய அனைவருக்கும், ஆசிரியர் குழுவிற்கும் எமது மனமார்ந்த நன்றி. இச்சஞ்சிகைக்கு கதை—கவிதை—கட்டுரைகள் அனுப்புவோர் செயலாளரின் பெயருக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எமது மன்றத்தின் கிளைச் சங்கங்களில் நூல்நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். கிளைச் சங்கங்களில் நடைபெற்ற பொதுக்கூட்ட விபரத்தினை அறிப்பதிலும் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறோம்.

யாழ்கிளையில் 31-5-72ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: பி.எஸ். சிற்றம்பலம் அவர்கள்.
உபபோஷகர்: பி. தேவபாலன் அவர்கள்.
தலைவர்: வி. எஸ். கணபதிபிள்ளை அவர்கள்.
உபதலைவர்: எஸ். கந்தசாமி அவர்கள்.
செயலாளர்: வி. வி. தங்கராசா அவர்கள்.
உபசெயலாளர்: ஏ. குமாரசாமி அவர்கள்.
பொருளாளர்: என். ஜி. கனகரத்தினம் அவர்கள்.
நூல்நிலையப் பொறுப்பாளர்: பி. மரியதாசன் அவர்கள்
செயற்குழு அங்கத்தவர்கள்: (1) சி. சஞ்சீவராசா அவர்கள்.
(2) ~~எஸ்~~ என். கனகசபை அவர்கள்.

திருகோணமலைக் கிளையின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: டபிள்யூ. எப். ஏ. வீரசிங்கம் அவர்கள்
தலைவர்: அ. க. பரமநாதன் அவர்கள்.
செயலாளர்: மா. துரைராசா அவர்கள்.

பொருளாளர்: எஸ். மயில்வாகனம் அவர்கள்

வவுனியாக் கிளையில் 24-4 72ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: ம. சிவானந்தன் அவர்கள்.
செயலாளர்: சி. சிவானந்தன் அவர்கள்.
பொருளாளர்: வி. துரைசிங்கம் அவர்கள்
நூல்நிலையப் பொறுப்பாளர்; க. பரராசசிங்கம் அவர்கள்.

4-7-72ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கார்த்திகைத் திங்களில் தமிழ் விழா நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ் விழா பற்றிய ஆலோசனைகள் அங்கத்தவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப் படுகின்றன.

—செயலாளர்

# நினைவில் நிற்பவை

"கற்றல், கேட்டல், நினைத்தல், தெளிதல், இவ்வாறு-கேட்டவாறு - நினைத்தவாறு - தெளிந்தவாறு- நிற்றல், இந்த ஐந்தும் உடையவர்கள் தான் பெரியோர்கள்."

"ஒரு மணியை அடித்தால், அந்த மணியோசை அடித்து விட்டவுடன் நிற்காது; தொடர்ந்துதான் நிற்கும். அது போலப் பெரியோர்கள் சொல்லியது எக்காலத்தும் தொடர்ந்து பயனை விளைவிக்கும்"

"அறிவுதான் உலக மெங்கும் நிறைந்து நிற்கின்ற பெரும் பொருள் - பரம் பொருள்"

"பெரியோர் எதை நாட்டினார்கள்? உயிருக்கு எது நிலையானதோ அதை நாட்டினார்கள்; எது அல்லாததோ அதை ஓட்டினார்கள்; உயிருக்குத் துணையல்லாததை ஓட்டினார்கள்; துணையானதை நாட்டினார்கள்."

"அநுபவத்தாலே இருவர் கருத்து ஒன்றுபட்டிருந்தால் அது நிச்சயம் என்று அர்த்தம். அதில் பொய்யிருக்காது; சந்தேகமடையக்கூடாது." — காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனம் சீலசிறி ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய அருளுரையிலிருந்து....

"இறை வேந்தன் முகையான்
ஞானந்தன் ஒளியான்
செவ்வேள் தன் வேலான்
வேடன் தன் கோலான்
வெற்றி வேலான்
ஆதியந்தன் தாய் தயவாய்
சோதி செந்தாமரை பூத்த பூவாய்
புலன் கொன்ற ஒளியாய்
வருவாய் வேலாய்"—இவ்வரிய பாடலை எனது

இளைய சகோதரி ஈஸ்வரிதேவி மெய்மறந்து மனமுருகிப் பாடிவந்தார். அவரது அகால மறைவின் ஞாபகமாக, ஆண்டு நிறைவை ஒட்டி எனது அன்னையின் மனச்சாந்திக்காக......

தொகுத்தளிப்பவர்: சதாசிவம் நவரத்தினம்

# தமிழிலக்கியமும் - சாதியொழிப்பும்

— பொன்னழகன் —

அவ்வக்காலத்தில் நிலவும் அரசியல்—சமுதாய—பொருளியல் நிலைக்கேற்ப இலக்கியப் போக்கு அமைகின்றது என்பது மேலை — கீழைத்தேய இலக்கிய அறிஞர்களும் ஒப்பமுடிந்த உண்மையாகும். இந்த நோக்கில் தமிழ் இலக்கியங்களை ஆராய்வதன் மூலம் ஆதியில் தமிழர் சமுதாயத்தில் சாதிப்பாகுபாடு இருந்ததா? இருக்கவில்லையா? இருக்கவில்லையாயின் எப்போது தோன்றி வளர்ச்சியுற்றதுஎன்பவற்றை அறியக் கூடியதாக உள்ளது.

மனித சமுதாய வளர்ச்சியை நோக்கின் ஆதியில் சாதிப்பாகுபாடு இருந்ததாகக் கூறமுடியாது. சிறுசிறு கூட்டங்கள் — குலங்களாக இருந்த மக்கள் சமுதாயம் காலப்போக்கில் வளர்ச்சியடைந்ததற்கேற்ப அரசியல் — பொருளியல் நிலைகளும் வளர்ச்சியுற்றன. தொழில் அடிப்படையில் சமுதாய அமைப்பு நிலவியதேயொழிய தொடக்கத்தில் அது சமுதாய ஏற்றத்தாழ்வாக — சாதிப்பாகுபாடாகஅமைந்திருக்கவில்லை.வளர்ச்சிப் போக்கில் தொழில் அடிப்படையில் அமைந்த குழுக்கள்—அத்தொழிலைப் பரம்பரையாகச் செய்துவர சாதிப்பாகுபாடும் கருக்கொள்ளத் தொடங்கியது எனலாம். வரலாற்றேட்டத்தில் காணப்பட்ட இப் பொதுப்பண்பு தமிழர் சமுதாயத்திற்கும் பொருத்தமுடையதாகின்றது.

தமிழர் சமுதாயத்தில் ஆதியில் சாதிப்பாகுபாடு இருக்கவில்லை. காலத்தால் முந்திய சங்க இலக்கியத்தில் மக்கள் எல்லோரும் ஓரினம்; சமத்துவமுடையவர்கள் என்ற பொதுமை நோக்குக் காணப்படுகின்றது. ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' — அதாவது எல்லோரும் உறவினர் என்கின்ற போது அங்கு மனித சமத்துவத்தைக் காணமுடிகின்றது. அறிவு - அறிவின்மை, பொருள் — பொருளின்மை, வீரம் — வீரமின்மை என்பவற்றிற்கிணங்க மக்கள் சிறப்பு நிலை பெற்றனரேயொழிய பிறப்பினால் உயர்வு — தாழ்வு கற்பிக்கப்படவில்லை. மேலைநாட்டில் பிரெஞ்சிய புரட்சியின் மூலம் காணத்துடித்த சமத்துவ - சகோதரத்துவ - சுதந்திர சமுதாயத்தை பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் கண்ட தமிழரின் இன்றைய நிலை என்ன? எனின் அவர் தம் ''தீண்டாமைக் கொள்கை'' தமிழ் இனத்தைப் பிறர் பழிக்கும் அளவுக்கு, அவர்களின் இரத்தத்துடன் ஒன்றாகக் கலந்து ஊறிவிட்டது.

தமிழர் சமுதாயத்திற்குக் கிடைத்த அரிய செல்வங்களில் ஒன்ருகிய தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் பொதுவாக திராவிட மக்களின் - சிறப்பாக தமிழ் மக்களின் சமுதாய அமைப்பைக் காணக் கூடியதாக உள்ளது. தொல்காப்பியர் காலச் சமுதாயம் அவர் அவர்கள் செய்த தொழில் முறைகளுக்கேற்ப குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது; வாழும் நிலை அமைப்பிற்கேற்ப தொழிலும் பிரிக்கப்பட்டிருந்தது. குறிஞ்சியில் வேடரும், முல்லையில் ஆயரும், மருதத்தில் வேளாண்மை செய்வோரும், நெய்தலில் கடற்ரெழிலாளரும், பாலையில் கொள்ளைக்காரர்களும் வாழ்ந்தனர். இவ்வாறு வாழ்ந்த மக்கள் அத்தொழிலில் நிரந்தர தன்மை பெற காலகதியில் சாதிப்பெயரால் குறவர்களாக-பொதுவர்களாக (இடையர்களாக) வேளாளர்களாக-நுளையர்களாக-மறவர்களாக அழைக்கப்பட்டனர். எனினும் தொல்காப்பியத்தில் மேற்காட்டப்பட்ட ஒருவகைச் சமூக வேற்றுமை காணப்பட்டதேயொழிய இன்றுபோல் உயர்வு - தாழ்வு - தீண்டத்தகாதோர் என்ற பாகுபாடு காணப்படவில்லை. ஆகவே தொல்காப்பியத்தில் பிறப்பினுல் சாதி பிரிக்கப்பட்டதைக் காணமுடியாது.

இந்திய வரலாற்றுப் போக்கினை நோக்கினுல் திராவிடர்கள் உயர்ந்த நாகரீகமுடையவர்களாகவும், பிற நாட்டுடன் வணிகத் தொடர்பும், சமய நெறியில் சிறப்பாகப் பெண் தெய்வ வழிபாடும் - அதன் வழி சிவ வழிபாடும் உடையவர்களாக வாழ்ந்தமை புலனுகின்றது. பொதுவாக ஏற்றத் தாழ்வற்று வாழ்ந்த திராவிட சமுதாயத்தில் ஆரியர் வருகை பெருமாற்றங்களை - தாக்கங்களை ஏற்படுத்தியது. ஆரியர் இந்தியாவில் படிப்படியாகக் குடியேற்றங்களை அமைக்கத் தொடங்கி போரில் ஈடுபட்டனர். தங்களிலும் மாறுபட்டவர்களை தஸ்சுக்கள் — அதாவது கறுப்பர்கள், நாகரீகமற்றவர்கள் எனக் கூறி ஒதுக்கினர். தம் இனப்பெருமையைப் பேணிப் பாதுகாக்க விரும்பிய அவர்கள் தங்கள் சமூகத்தினர், மற்ற இனத்தினருடன் கலப்பு மணம் செய்வதையோ - பிறருடன் தொடர்பு கொள்வதையோ அனுமதிக்கவில்லை.

இருக்கு வேகத்தில் 'வர்ணச்சிரம தர்மம்' பேசப்படுகின்றது. ஆச்சிரம தர்மம் தனியொருவனினதும், வர்ண தர்மம் சமுதாயத்தினதும் ஒழுக்க நெறியாகப் போற்றப்படுகின்றது. வர்ணதர்மம் மனித இனம் முழுவதையும் நான்கு பிரிவாகப் பகுக்கின்றது. இங்கு தான் படைப்புக் கடவுளாகிய பிரம்மாவினுல் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வர்ணங்களும் படைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும் அக்காலச் சமுதாய அமைப்பில் உயர்வு - தாழ்வு காட்டப்படவில்லை; ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கட

---

❁ கிறிஸ்தவம் அறிவிலும் பார்க்க அன்பே மேலானதென மக்களுக்கு விளக்கியுள்ளது.

— ஜசூயிஸ் மரிரெயின்

❁ தாழ்ந்த இலட்சியத்தில் வெற்றி பெறுவதைவிட. உயர்ந்த இலட்சியத்தில் தோல்வியுறுவதே சிலாக்கியம்.

— கார்ல் சூர்ஸ்

மைகளைச் செய்தனர் என்றே பலவரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். பிற்காலத்தில் ஹிட்லர், ''தானே உண்மையான ஆரியன்; தம்மினமே உண்மையான இரத்தக் கலப்பில்லாத ஆரிய இனம்'' எனக் கூறி இனத் தூய்மை காக்கப் போரில் ஈடுபட்டது போல, ஆரியரும் தங்கள் சமூகபெருமையைக் கட்டிக்காக்க வர்ணாச்சிரம தர்மத்தினைத் திருத்தி, புதுவிளக்கம் கொடுத்தனர். சமுதாயத்தில் ஒரு பிரிவினரை அடிமைகளாகப் பாவித்து — கீழ்ப்பட்டோராக்கி 'சூத்திரர்' எனக்கூறி ஒதுக்கினர். ''எந்த ஒரு இனமும் காலப்போக்கில் மற்ற இனத்துடன் தொடர்பு கொள்ளாது வாழமுடியாது'' என்பதற்கிணங்க ஆரியரும் திராவிடர்களில் சத்திரிய - வைசியர்களுடன் சிறிது சிறிதாகத் தொடர்பு கொண்டு அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கத் தொடங்கினர். பொதுவாக தொழிலடிப்படையில் நிலவிய பாகுபாடு ஆரியக்கோட்பாடு செல்வாக்கினால் பிற்பட்ட இருக்கு வேத காலத்திலிருந்து சாதிப்பாகுபாடாக வேரூன்றத் தொடங்கி வளர்ச்சியுற்றதெனலாம்.

உலக வாழ்க்கைக்கு வேண்டிய நெறிமுறைகள் — அறநெறிகள் - அரசியல் - பொருளியல் நெறிகள் யாவற்றையும் கூறும் தமிழர் பொதுமறையாகிய திருக்குறள் கால - தேச - வர்த்தமானங்களைக் கடந்து இன்றும் ஒப்புயர்வற்று விளங்குகின்றது. அதில் சாதியமைப்புக்கு ஆதரவளிக்கும் குறள் ஒன்றையேனும் காணமுடியாது. எனினும் திருவள்ளுவர்காலத்தில் தமிழர் சமுதாயத்தில் சாதிப் பாகுபாடு நிலவியதை — வளர்ந்துவந்தமையை மறுக்கமுடியாது. தமிழர் சமுதாயத்தில் சாதியமைப்பு நன்கு வேரூன்றிவிட்டதினால் தான் வள்ளுவர்,

''பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வாக
செய்தொழில் வேற்றுமை யான்'
குறள் 972 — என்று

கூறி மனித இனம் முழுவதும் பிறப்பினால் சமம் என்ற திராவிடர்களின் — சிறப்பாக தமிழர்களின் பண்டைய கொள்கைக்கு வலுவூட்டுகின்றார்.

தொழில்முறை வகுப்பினர், தந்தைபின் தனயன் என்ற முறையில் தொழிலில் ஈடுபட்டமையும் சாதிப் பாகுபாட்டின் வளர்ச்சியில் கனமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இவ்வாறு வளர்ந்து வந்த சாதியமைப்பு, மதத்துக்கு வழங்கப்பட்ட சிறப்பியல் பின் காரணமாக மேலும் வளர்ச்சியுற்றது. கோயில்கள் அமைக்கப்பட்டு அங்கு பூசகர்களாக பிராமணர் அமர்ந்தமையும், சடங்குகள் கிரிகைகள் சமுதாயத்தில் வளர்ச்சியடைந்தமையும் சாதியமைப்புக்கு மேலும் வலுவூட்டின. இதனைப் பின்வந்த

---

❀ உலகத்தில் படித்தவர்கள் அநேகர். இந்தப் படித்தவர்களைக் கண்ணியப் படுத்துபவர்கள் படிக்காதவர்களாயினும் என்னை மிகுதியும் கண்ணியப்படுத்துபவர்கள் ஆவார்கள்.

— முகம்மது நபி

❀ வர்ண பேதமும் சரி, சாதிபேதமும் சரி, இரண்டும் வர்க்கபேதங்களைச் சிருட்டித்து, மக்களைச் சுரண்டுவதற்கு உதவிய சமுதாய அமைப்புக்களே.

— சிதம்பர ரகுநாதன்.

இலக்கியங்களில் பரக்கக் காணலாம். பல்லவர் காலம் 'பக்தி இலக்கியம்' பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்த காலமாகும். ஆழ்வார்களும் நாயன் மார்களும் தோன்றி வைணவ—சைவ மதங்களுக்குப் புத்துயிர் அளித்து அவற்றின் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினர். மக்கள் யாவரும் இறைவன் சன்னிதியில் சமமானவர் கள்; சமுதாயத்திலும் அப்படியே'' என்ற உண்மைகளை உணர்த்தினர். சாதியமைப்பை'த் தகர்த்தெறியத் தொண்டாற்றினர்.

''அங்க மெலாம் குறைந்தழுகு
தொழுநோயராய்
ஆவுரித்து தின்றுழலும்
புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு
அன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும்
தெய்வமாரே''

புலையர் என அக்காலத்தில் ஒதுக்கப் பட்டோர் கூட இறைவனின் அன்ப ராகில் கடவுளாகவே அப்பரின் உள் ளத்தில் தோன்றுகின்றனர். அவர் களும் சமுதாயத்தின் ஒரு அங்கம்; தாழ்வு காட்டி அவர்களை ஒதுக்கக் கூடாது என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றார்.

''சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்'' — நிலையை நீக்குமாறு வேண்டுகின்றார் மணிவாச கர். சேக்கிழாரின் பெரிய புராணத் தில் சமுதாய ஏற்றத்தாழ்வு கடைப் பிடிக்கப்படாது — அதனை நீக்குவ தற்கு நாயன்மார்களே வழிகாட்டி களாக அமைந்தமையைக் காணமுடி கிறது. அவர் காட்டும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பத்துப்பேர் வரை இன்று தமிழர்களிடை குறைந்த சாதி எனக் கருதப்படுவர்க ளாகும். ஆகவே நாயன்மார்களின் மத்தியிலோ — நோக்கிலோ சாதி பேதம் பாராட்டப்படவில்லை; அவர் கள் சாதியமைப்பையே வெறுத்து — அதனை உடைத்தெறிய முயன்ற மையை அவர்களின் பக்திப் பாடல் கள் தெளிவுபடுத்துகின்றன. நந்தனா ரின் பக்தியை — கண்ணப்பரின் ஒப் பற்ற அன்பு நிலையைப் போற்றும் நாம் இன்று ஒருபகுதி மக்களை தாழ்த் தப்பட்டவராக்கி ஆலயங்களுக்குள் செல்லவிடாது தடுப்பது ஏன்?

மறுமலர்ச்சிக் காலம் — அறிவி யல் நெறிகள் தோன்றிய காலம் எனப் போற்றப்படும் இக்காலத்தில், தமிழ் இலக்கிய உலகில், கவிதையில் புரட்சியை ஏற்படுத்தியவர் பாரதி. பழமையில் தேவையானவற்றை — நல்லவற்றைப் போற்றினார்; மூடக் கொள்கைகளைச் சாடினார். தமிழினம் தன்மானத்துடன் வாழவேண்டு மெனக் கருதிய இவர் பல புதுமைக் கருத்துக்களை மக்கள் முன்வைத்தார். இவர் காலம் ஐரோப்பியர் கீழைத் தேயத்துடன் பெருமளவு தொடர்பு கொண்ட காலமாகும். மேலை நாட் டில் நிலவிய சமத்துவக் கோட்பாடு தமிழரிடையேசெழிக்க வேண்டுமென விரும்பினார். பிறப்பினால் மனித இனம் ஒன்றே என்பது அவரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அதனால் தான் பார்ப்பனராகிய அவரே,

''பார்ப்பாரை ஐயரென்ற கால மும் போச்சே''-என்று சாடுகின்றார். தமிழர்களிடையேயும், நான்கு சாதிப் பிரிவுகளும் தோன்றிய பின் னர், அவற்றை அடிப்படையாகக்

கொண்டு மேலும் பல சாதிப்பிரிவுகள் உருக்கொண்டன. இதனல் சாதிப் பிரிவுகள் கணக்கிட முடியாத அளவுக்குத் தோன்றியமையைக் கண்ட பாரதி,

''மனிதரில் ஆயிரம் ஜாதி என்ற
வஞ்சக
வார்த்தையை ஒப்புவதில்லை''

என்று உள்ளக்குமுறலுடன் – அதனைக் கட்டிக்காப்போரைச் சாடுகின்றார். சமுதாய அமைப்பில் மாற்றத்தினைக் காணமுனைந்த பாரதிக்கு உயர்ந்த இடமெனக் கூறப்படும் இடத்திலிருந்து எதிர்ப்புக்கள் தோன்றின. தாங்கள் கடைப்பிடிக்கும் மூடக் கொள்கைகளுக்கு – சாதியமைப்பிற்கு சாத்திரங்களில் ஆதாரம் காட்டினர். சாதிப்பாகுபாடு வலுவுற்று வர பின் வந்த சாத்திரங்களில் ஆசுசக்கொள்கை காணப்பட்டது உண்மை; ஆனல் மக்களில் ஒரு சாராரை ஆசுச வர்க்கத்தினராகக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. புதுமையை - தமிழரின் சமுதாய மேன்மையை விரும்பிய பாரதி.

''மேலவர்கீழவ ரென்றே வெறும்
வேடத்தில் பிறப்பினில்
விதிப்பனவாம்;
போலிச் சுவடியை யெல்லாம் –
இன்று பொசுக்கிவிட்டால்
எவர்க்கும்
நன்மை யுண்டாம்'' – என்று

சாத்திரங்களில் சிலவற்றினைத் தீயிலிடும்படி கூறுகின்றார். இனத்தூய்மையை – சாதியமைப்பைக் கட்டிக்காக்க விரும்பிய உயர்ந்த இடத்தினர் இயற்கையில் பொருந்தாத நியதிகளைச் சாத்திரங்களாக எழுதி – அதற்கு விளக்கமாக சமுதாயப் பிரிவினையைக் கடைப்பிடித்தனர்.

''சூத்திரனுக்கொரு நீதி –
தண்டச் சோறுண்ணும்
பார்ப்புக்கொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின்
அது சாத்திரமன்று
சதியென்று கண்டோம்'' —

என்று கண்டிக்கும் பாரதி பழங்கோத்திரங்களைக் கூறும் மக்களை மூடர் என்றும், அவர்கள் காட்டும் சாத்திரம் பொய்மைக் கூடையென்றும் ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் கூறுகின்றார் கவிதையில் மட்டுமன்றி 'சமூகம்' என்னும் தனது கட்டுரை நூலிலும் கூட இக் கருத்தினை வலியுறுத்தியுள்ளார். பாரதியின் பின்வந்த பாரதிதாசன். தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல்கவிஞர் போன்றோரும் – ஈழக்கவிஞர்களாகிய மஹாகவி முருகையன், தான் தோன்றிக் கவிராயர் போன்றோரும் சாதியமைப்பை ஒழிக்க முயன்றமையை அவர்களின் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

20–ம் நூற்றாண்டு இலக்கியத்தில் நாவல்களும் – சிறுகதைகளும் மிகச் சிறப்பிடம் பெறுகின்றன. புதுமைப் பித்தன், மணிக்கொடி குழுவினர், ஜெயகாந்தன், அகிலன் போன்ற தமிழக இலக்கிய கர்த்தாக்களும் – டொமினிக் ஜீவா, கணேசலிங்கன், எஸ். பொ., நா. க. தங்கரத்தினம், டானியல், செ. யோகநாதன் போன்ற பல ஈழத்து இலக்கிய கர்த்தாக்களும் சாதியமைப்பின் கொடுமைகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் படைத்துள்ளனர். ஜெயகாந்தன், கணேசலிங்கன், டொமினிக் ஜீவா போன்றோர் கனதியானதும் - யதார்த்தபூர்வமும் நிறைந்த

படைப்புக்களின் மூலம் சாதியமைப்பைத் தகர்த்தெறிவதற்கு தீர்வு காணும் முறையிலும் இலக்கிய ஆக்கங்கள் புரிந்துள்ளனர்.

இவ்வாருக சாதியமைப்பின் கொடுமைகளை எடுத்துக்காட்டி, அதனைத் தகர்க்க எடுத்துக்கொண்ட சமூக — அரசியல் — இலக்கிய முயற்சிகளினுல் இந்தியாவில் ஓரளவு தீண்டாமைக் கோட்பாடு அருகி வந்தது; வருகின்றது. எனினும் ஈழத்தில் அதன் அழிவு இன்னும் பெருமட்டமான ரீதியில் ஏற்படவில்லையெனலாம். ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற உயர்ந்த பண்பாடுடையவர் என்று பழம் பெருமை பேசுவதில் சிறப்பில்லை. அதனைச் செயலில் காட்டவேண்டும். அவ்வழியில் அறிவியல் நெறிக்காலக்கட்டத்தில் வாழும் தமிழ் மக்களும் முன்னேறுவது மிகப் பொருத்தமான செயலாகும்.

---

# சிந்தனைக்கு ஒரு நிமிடம்!

★ பலரைப்பற்றியும் தெரிந்து கொள்; சிலரோடுமட்டும் பழகு; இருவர் மூவரோடு மட்டும் நெருங்கி நட்புக்கொள்.

— தங்கைக்கு — மு. வ.

★ பிரிந்து பிரிந்து குறைந்த நேரம் பழகுகின்றவர்கள் இயற்கையாகவே விட்டுக்கொடுத்து அன்போடு பழகுகின்றுர்கள். பழக்கம் ஒரே இடத்தில் நின்று நீடிக்கும் போது தான் ஒருவர் குறை மற்றவருக்குத் தெரிகின்றது; பிறகு வெறுப்பு வளர்கின்றது; அதன் பிறகு உரிமைப் போராட்டம் எழுகின்றது.

— தங்கைக்கு — மு. வ.

★ மக்கள் வாழ்க்கை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் எந்த மொழி அரசியல் மொழியாக விளங்குகின்றதோ அந்த மொழிதான் மக்களின் மொழியாக விளங்கும். நேற்றுத்தோன்றிய கொச்சை மொழியாக இருந்தாலும், அரசியல் மொழியானுல் அது ஓங்கி வாழமுடியும். உலகம் தோன்றிய நாளில் தோன்றிய பண்பட்ட மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியாக விளங்கவில்லையானுல் வாழவழியில்லை.

— மொழிப்பற்று — மு. வ.

★ உரிமையோடு வாழவிரும்புவது இயற்கை. அதை எந்த அரசாங்கமும், எத்தகைய கடும் சட்டமும் தடுக்க முடியாது. அடக்குமுறையைக் கையாளலாம்; ஆனுல் அது மக்களின் வாழ்க்கைப் போக்கை மாற்றுமே தவிர அவர்களின் உரிமை வேட்கையைத் தடுக்கமுடியாது.

— நாட்டுப்பற்று — மு. வ.

★ பசி எடுக்கின்ற வயிறு உள்ளவர்கள் தான் வயிருரச் சாப்பிட முடியும். அடங்கி நடக்கின்றவர்கள் தான் உரிமையின் நன்மையை அனுபவிக்க முடியும்.

— தங்கைக்கு — மு. வ.

தொகுத்தவர்: இரா. இராமச்சந்திரன்

# "பிரிவின் ஆற்றுமை"

— செல்வி சிவக்குமாரி

அன்பே அமுதே அறிவே என்று
அரற்றி அரற்றி அன்பில் திளைத்து
அரிதாம் அறிவை அளவாய் பகிர்ந்து
அன்று இருந்தோமே அமிழ்தெனும் கடலில்...

ஆழ்ந்து ஆழ்ந்து ஆழியில் ஆடும்
ஆனந்த நிலவின் சோபை அதுபோல்
ஆற்றலொடு அன்பு கொண்டு நாம்
ஆடித் திரிந்தோமே ஆரம்பப் பள்ளியில்...

இன்பம் துன்பம் எதுவந்த போதும்
இனிதுடன் இருவரும் இன்முகம் காட்டி
இரு பிரிவாக இருகை யேந்தி
இருந்த காலம் இனிதே நினைவில்...

ஈருடல் ஓருயிர் என்றனர் நம்மை
ஈன்ற பசுவும் கன்றெனர் நம்மை
ஈறும்பு முதல் போற்றிய நாம்
ஈற்றில் இணைப்பை இழந்தோம் இன்று

உவர்மிகு நீர் உப்பாக மாறுதல் போல்
உடலால் பிரிந்தநாம் உள்ளத்தால் ஒன்றி
உவர்உப்பு உணவுக்கு உதவுதல் போல்
உன் அன்பு என்றென்றும் என் துன்பம் போக்கும்.

---

ஒன்றே உள்ளது. பலமாறி மறையும்; விண்ணின் வெளிச்சம் என்றும் ஒளிதரும். மண்ணின் நிழல்கள் பறந்தோடிவிடும்.

— ஷெல்லி

# நெஞ்சிருக்கும் வரை

— அமிதா —

கூட்டிலிருந்துஎழும்பியதும்யன்னலின் அருகே சென்று பனிபடர்ந்த அந்த மலைக்குன்றுகளைநோக்கியவாறு அதைத் திறந்தேன்.

அதிகாலையில் எழும் குளிர் காற்று என் உடம்பையும் ஓர் உலுக்கு உலுக்கி அறைமுழுவதும் பரவத் தொடங்கியது. வேலைத்தளம் நோக்கி ஓடி ஆடித் திரியும் எத்தனையோ பேர் என் கண்களுக்குத் தென்பட்டனர். காலையில் சாப்பிட்டும், சாப்பிடாமலும் அரைகுறை வயிற்றோடு தங்களை விழுங்கிவிடுமளவுக்கு தலை மேல் கூடைகளைச் சுமந்து கொண்டு செல்லும் இளம்பெண்கள் ஒரு புறமும், பெற்ற குழந்தைகளைப் பராமரிக்க தோட்ட நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ள 'ஆயா' விடம் தாய்மார் குழந்தைகளுடன் ஓடுவதும், வாயில் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு, தன்னை விடப் பெரிய 'கொழுந்து'ச் சாக்குகளைத் தலையில் சுமந்து கொண்டும் செல்லும் நலிவுறும் தொழிலாளர் சமூகம் தோட்டத்தையே கலகலப்பாக வைத்துக்கொள்ளத் துடிக்கும் காட்சி என் கண்களுக்குத் தெரிந்தது.

அறைக் கதவையும் திறந்து கொண்டு வெளியே வந்தேன். சிவந்த ரோஜாமலரொன்று என்னைப் பார்த்துக் கண்சிமிட்ட, பல நாட்களுக்கு முன்னால் பூத்த இதழ்கள் தரையில் கிடந்த வண்ணம் என்னை நோக்கி, 'எம் கதிதான் அதற்கும்' எனக்கூறுது கூறிச் செடியோடு செடியாக மாண்டு கிடந்தன.

இந்த மண்ணில் இன்னும் ஒரே ஒரு வாரம். பல ஆண்டுகளாகப் பார்த்து, ரசித்து, உண்டு, உடுத்த அத்தனையையும் விட்டுவிட்டு, இடம் பெயர்ந்து செல்ல ஒரே ஒரு வாரம் மிகுதி.

என்னுடைய மார்பகங்கள் அகன்றுவிரிய, மூக்குத் துவாரங்கள் கூடியளவு காற்றைத் தம்மால் இயன்றளவு உள்ளே இழுத்து அதே வேகத்தோடு வெளியே தள்ளின. உடம்பு குளிர்ந்ததே தவிர, வந்ததெல்லாம் ஒரே சூடான பெருமூச்சுத்தான்!

சமயலறையில் என்னுடைய வேலையாள் என்னவோ என்னைவிட யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

''அடே மணி! தேத்தண்ணிஊத்திட்டியா?'' நான் அடே என்று அழைத்தது என்னுடைய வேலைக்காரன் என்பதற்காகவல்ல. என்னுடைய இன்ப துன்பங்களிலெல்லாம் அத்தனை நாட்களாகப் பங்கு கொண்ட பாசஉணர்ச்சியினால் தான் அவன் என்னைவிட வயதில்மூத்தவன். என்னிடம் அவன் எந்தவிதமான வெறுப்புக்களையும் வெளிப்படுத்தியதே கிடையாது. நானில்லாத சம

யம் என்னுடைய உடைகளையே உடுத்து ஒத்திகை பார்க்கும் உரிமையைக் கூடக் கொண்டாடுவான்.

'மணி' மீண்டும் பலமாகச் சத்தமிட்டேன்.

'நில்லுங்க ஐயா வர்ரேன். தேத்தண்ணி ரெடியாயிடுச்சு மனசுக்குத்தான் ஒரே சங்கடமாயிருக்கு. ஒரே அலுப்பும், கவலையும், இனி என் கையாலே ஒங்களுக்கு எப்படித் தேத்தண்ணி ஊத்திக் கொடுப்பேன்'' தேனீரை மேசைமீது வைத்துவிட்டு, அவன் தனது முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டே மீண்டும் வேலையைத் தொடங்கினன்.

என்னுடைய இடதுகை உயர்ந்தது. கடிகாரத்தை நோக்கினேன் ஏழரை மணி, நான் எதிர்பார்த்த அந்த 'அவள்' இன்னும் போகவில்லை. ஏன்?

அவளின் உடம்புக்கு ஏதும் சுகமில்லையோ? காலைச்சாப்பாடு உண்ணுமலேயே வேலைக்குச் செல்ல ஆரம்பித்தேன். எட்டு மணிக்கு என்னுடைய அலுவலகம் ஆரம்பம்.

நீண்டு, வளைந்து செல்லும் அந்த மணல்ரோட்டின் வழியாக ஓடாமல் ஓடினேன். ஒரு திருப்பத்தில் என்னுடைய வரவை எதிர் நோக்கி அவள் நின்று கொண்டிருந்தாள்.

என்னுடைய நடையில் அவளைக் கண்டதுமே ஒரு தளர்ச்சி ஏற்பட்டது. அருகில் சென்றேன்.

அவளுடைய கண்கள் கலங்கியிருந்தன. இரவில் நித்திரை கொண்டாளோ என்னவோ நானே பேச்சை ஆரம்பித்தேன்.

'என்ன மாலதி ஒரு மாதிரி இருக்கிருய்?' அவள் என்னிடம் இந்தக் கேள்வியை எதிர்பார்த்திருக்கமாட்டாள். நான் கேட்ட கேள்விக்குப் பதில் கொடுக்கும் நிலையில் அவள் இல்லை. எப்படியோ ஆரம்பித்துவிட்டாள்.

'நீங்க இந்த இடத்தை விட்டு வெலகி வேற வேலைக்கிப் போகப் போரீங்களா? ஊரே பேசிக் கொள்ளுது. என்னையும் எத்தனையோ பேர் கேட்டாங்க. உண்மையா?'' அவளுடைய கண்கள் என்னையே கூர்ந்து நோக்கின.

எனக்கு அவளுடைய கண்களைப் பார்க்கவே துணிவில்லை.

மனிதனுடைய கண்ணுக்குத்தான் எத்தனை சக்தி! பொய்யுரைக்கும் எந்த ஒருவனுக்கும், முகத்தைப் பார்த்து அதில் ஒளிக்கும் கண்களை நேரில் சந்திக்கச் சக்தி இருக்காது. இதனுல் தான் வழக்கறிஞர்கள் கூட அடிக்கடி தங்களுடைய கண்களைப் பார்த்து பதில் சொல்ல வேண்டுமென்று நீதிமன்றங்களில் கூறுகின்றனரோ!

என்னுல் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. மாலதியோ என்னிடமிருந்து உடனே விடையை எதிர்பார்த்தாள்.

''சுருக்காச் சொல்லுங்க. வேலைக்குப் போகணும் நேரமாச்சு.'' என்ருள் அவள்.

''உன்னிடம் நான் இவ்வளவு நாளும் சொல்லாது விட்டது தவறு

தான். இன்னும் ஒருவாரத்தில் இந்த இடத்தைவிட்டு நான் கொழும்புக்குப் போய்விடுவேன்''. என்றேனே தவிர யாருடன் போகப்போகிறேன் என்று சொல்லவே இல்லை. என்னுடைய நோக்கமெல்லாம் அவளுடன் போவதுதான்; அவளோ......

'எல்லாம் என் தலையெழுத்து' என்று கூறிவிட்டு என்முகத்தில் விழிக்கவே விரும்பாதவள்போல வேலைக்குச் சென்றுவிட்டாள்.

இந்த உலகத்தில் என்னைத் தவிர எனக்கு யாருமே உதவியில்லை. எனக்காக நொந்து வாழக்கூடிய ஒரே ஒரு உயிர் உண்டென்றால் அந்த உயிர் அந்த மாலதியினுடையது தான். இன்று அவள் போனகோலம் என்னுடைய துன்பத்தைப் பன்மடங்காக்கியது. என்னவெல்லாமோ செய்ய யோசித்தேன். இறுதியாக சக்தி இழக்கும்வரை குடித்துவிட்டு எங்கோ எப்படியோ கிடந்தேன். எல்லாம் ஒரு வாரத்துக்குத் தானே?

என் மனக் கண்ணில் மாலதி மீண்டும் தோன்றினாள்.

கல்லூரியில் படிக்கும் போது வேலை செய்து கைநிறையச் சம்பாதிக்கவேண்டுமென்ற ஒரு நப்பாசை எல்லோருக்கும் போல எனக்கும் ஏற்பட, என் ஆசையின் பிரதிபலிப்பாக எனக்கு வேலை கிடைத்துவிட்டது.

ஆட்களைப் பதிவு செய்யும் அந்த முதல்நாள் உத்தியோகத்தன்று, நான் புதிதாக வேலைக்குச் சேருவோரின் பெயர்களையும், மற்றவிபரங்களையும் பதிவு செய்து கொண்டிருந்தேன். எத்தனையோ பெண்கள், ஆண்களுக்கு மத்தியில் என்னுடைய வழமையான கேள்விகளுக்குக் கிடைக்கும் சீரான பதில்களைப் பதிவு செய்து கொண்டிருந்தேன். இடையே என்னுடைய கேள்விகளுள் ஒன்று வெளிக்கிளம்பியது.

''உன்னுடைய பேரென்ன?''

''மாலதி'',

என்னோடு படித்த அந்தக் கல்லூரி மாணவி மாலதிதான் நினைவுக்கு வந்தாள். இவளுடைய முகத்தை நோக்கினேன். அவளோடு ஒப்பிட முனைந்தேன். என்னவோ எனக்குள் ஒரே துடிப்பு. உடம்பில் ஒரு புதிய உத்வேகம். குறிப்பிட்ட ஒருத்தியை அடிக்கடி பார்ப்பது மற்றவர் மனதில் சந்தேகத்தை உருவாக்கும் என்ற பயத்தில் பார்க்க முடியாத நிலையிலும் என்மனம் பார்க்கத் தூண்டியது.

யன்னல்களுக்கு வெளியே நின்ற அவளுடைய அரைவாசி உடம்பு எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அந்த முகத்தில் தான் எத்தனை அழகு. அவள் என்னவோ ஒரு சிவந்த மேனியற்ற கருமையானவளாகத் தோன்றினாலும், பெண்மைக்குரிய அங்க லட்சணங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருந்தாள். சுருள் படர்ந்த அடர்ந்த தலைமயிர், கை நிறைய கண்ணாடி வளையல்கள், நெற்றியில் ஒரு பெரிய பொட்டு. அவற்றிற்கெல்லாம் மெருகூட்ட அவளுடைய புன்னகையின் அழகே ஒரு தனித்துவத்தை எனக்கு எடுத்துக் காட்டியது.

ஒரு சில வார்த்தைகளே அவளுடன் கதைத்தேன். அப்பப்பா! அவற்

றில்தான் என்ன துடிப்பு! ஒரு ஏழைத் தொழிலாளியின் பிள்ளையா அவள்? ஏன் அவளும் தொழிலாளியாகி தேயிலையின் வேரோடு வேராகிச் சாக வேண்டும். ஏழையின் மகள் ஏழையாய்த் தான் சாகவேண்டுமென்பது என்ன நியதியா? இல்லையே!

அவள் என்னைப் போல் படித்துவிடவில்லை. இந்த உலகமென்னும் பல்கலைக்கழகத்தில் வாழ்க்கையெனும் பாடத்தைச் சிறப்பாகக் கற்று பசி-பட்டினி என்னும் எத்தனையோ பரீட்சைகளில் தேறியிருக்கிருள். மற்றவர்களுக்காக போலி வாழ்க்கை வாழத்தெரியாது. அவளுக்கு. இவற்றுக்கெல்லாம் நற்சான்றுகளாக அவளுடைய அழகு வழியும் உருவமைப்பே போதுமானது.

கார் வைத்திருப்பவர்களையும், உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களையும் மட்டுமே தம்முடைய உறவினர்கள் என்று கூறிக்கொண்டு, சொந்த வீட்டில் அரைப்பட்டினி, கால்பட்டினி கிடப்பவளல்ல அந்த மாலதி. அல்லது தோற்றத்திலும், பேச்சிலும் மட்டும் கண்ணகி வேடம் போட்டுவிட்டு, எத்தனையோ கோவலன்கள் பின்னுல் போகத்துடிப்பவளுமல்ல. உடம்பைக் காட்டியோ அல்லது உடம்பை விலைபேசியோ அவளுக்கு வாழத்தெரியுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. சுருங்கச் சொன்னுல் அவளுக்கு நடிக்கத் தெரியாது. அவள் ஒரு "Naturalist"

காலம் என்னையும் வென்றுவிட்டது. வகித்த, பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தையும் பொருட்படுத்தாது அவளுடன் எத்தனையோ இரவுகளைக் கழித்து விட்டேன்.

ஒரே ஒருநாள் நானே அவளாகவும், அவளே நானுகவும் மாறவேண்டிய நிலை உருவாகிவிட்டது; இயற்கை வென்றுவிட்டது. என் உணர்ச்சிகளுக்கு அவளைப் பலியாக்கிவிட்டேன்.

அதுவரை கண்மூடி வாழ்ந்த எனக்கு அவளுக்குள்ளே இன்னெரு உயிர் வளரத்தொடங்கியதும். தலை சுற்றத் தொடங்கியது. என்னுடைய உணர்ச்சியின் பிரதிபலிப்பை என்னுல் கற்பனை செய்யவே அவகாசம் இல்லாது போய்விட்டது. மற்றவர்களின் பழிச்சொல்லிலிருந்து விடுபட, வேலையிலிருந்து விலக "நோட்டீஸ்" கொடுத்துவிட்டேன்.

கிராமப்புறத்தில் சுமைகளோடு நல்ல பெயரெடுப்பதுஎன்பது, நகரத்தில் போன்று இலேசான செயலல்ல. என்னைப் பொறுத்தமட்டில் என்னுடைய மனச்சாட்சி என்ற தெய்வத்தின் முன்னர் அவளைத் திருமணம் செய்து மனைவியாக்கி, இறுதியில் ஒரு தாயாயும் ஆக்கிவிட்டேன். இனி எவளோடும் நான் வாழமுடியாது.

மற்றவர்கள் சொல்வது போல் திருமணங்கள் நிட்சயம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படமுடியாது. சொர்க்கம் ஒரு புனிதமான இடமாகக் கருதப்படும் போது, அங்கு நிச்சயிக்கப்படும் திருமணங்கள் நடுத்தெருவில் சீரழியக் ~~காணவில்லை~~. காரணமில்லை.

கணவனை இழந்த மனைவிக்கும், மனைவியை இழந்த கணவனுக்கும், பாலுணர்வினுல் ஏற்படும் தீய முடிவுகளுக்கும் சொர்க்கம் பொறுப்பாக இருக்கவே முடியாது.

என்னைப் பொறுத்தமட்டில் திருமணங்களின் வெற்றிக்கு எவ்வளவு

தூரம் மனிதன் பொறுப்போ அவ்வளவு தூரம் தோல்விக்கும் அவனே முழுப் பொறுப்பு. தன்னுடைய தவறை மூடிமறைக்கவே மனிதன் 'சொர்க்கம்' என்ற ஒரு கண்டறியா இடத்தைக் கற்பனை செய்து விட்டான் போலும்.

அவளை எனக்கென்று நான் நிட்சயித்து விட்டேன். என்னுடைய திட்டமெல்லாம் அவளுடன் வாழ்வது தான். சமுதாயம் என்ன சொன்னாலும் எனக்கு அக்கறை இல்லை. சமுதாயத்தை உருவாக்கிய இந்த உலகத்தை ஒரு நாயாகக் கருதுபவன் நான். நாய் என்னைப் பார்த்துக் குரைக்க மனிதனாகஇருந்துகொண்டு நான் நாயைப் பார்த்துக் குரைக்கவே மாட்டேன். ஒரு சில குரைக்கும் நாய்கள் கடித்தாலும், அந்தக் கடிகளுக்கு என்னிடத்தில் மருந்துண்டு. எது எப்படியென்றாலும் இன்னும் ஒரு வாரத்தில் அவள் என்னோடு வெளியேற வேண்டும். இதை அவளிடம் எப்படியும் சொல்லத் துடியாய்த் துடித்தேன்.

அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவன் தோட்டத்தில், வேலைநேரங்களில், சுதந்திரமாகத் திரிய முடியாது. இது சட்டமல்ல, நடைமுறை. தவறி அங்கும் இங்கும் உலாவினால் பல அதிகாரபூர்வமான கேள்விகளுக்குத் தகுந்த ஆதாரங்களுடன் பதில் கொடுக்க ஆயத்தமாகவும் இருக்க வேண்டும். இதிலிருந்து விடுபட எண்ணிய நான் வேலையாள் மணியைத் தூதனுப்பினேன்.

அன்று நான் எதிர் பார்த்த வாரத்தின் இறுதி நாள்.

மணி எவ்வளவுவேகமாகச் சென்றானோ அவ்வளவு வேகத்தில் செய்தியோடு திரும்பிக் கொண்டிருந்தான். தூரத்தில் அவனைக் கண்ட எனக்கு ஒரே மகிழ்ச்சி. என்னுடைய உணர்வுகளோடு போட்டி போட்டு உதவும் அவனுடைய பெருந்தன்மைகளைக் கூட எடைபோட எனக்கு நேரம் கிடைக்கவில்லை. எனக்கு மிகமிக அருகில் வந்துவிட்டான். என்னுடைய இட்டத்தின் கடைசிக் கட்டம்.

அவனுடைய முகம் நன்றாக அப்போது எனக்குத் தெரிந்தது. அவனுடைய வெள்ளை உடைகளில் ஏதோ ஒரு நிறம் வெளிப்பட்டது. உற்று நோக்கிய நான்......

''மணி என்னடா நடந்தது? உடம்பெல்லாம் ஒரே இரத்த வெள்ளமாக இருக்கின்றதே!'' என்றேன்.

''ஐயா! மாலதி சாகப்போறா. கொழுந்தெடுக்கப் போனவ கால்

---

★ இரவில் வானத்தில் எண்ணற்ற நட்சத்திரங்களைப் பார்க்கிறாய். சூரியன் உதித்தவுடன் அவை அனைத்தும் பார்வையிலிருந்து மறைகின்றன. ஆனபடியால் நட்சத்திரங்களே கிடையாது என்று சொல்வாயா! இரவு வந்தால் அவை கண்ணுக்கு மறுபடியும் தெரியும். உனது அஞ்ஞானத்தின் பெரிய வெளிச்சத்தில் ஈசுவரனைக் காணமுடியாததால், கடவுளே கிடையாது என்று சாதிக்காதே. உனக்கே ஞானதசை வரும்போது அவனைக் காண்பாய்.

— பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்.

தடுக்கி விழுந்துட்டா. மண்டையில் அடிபட்டு ஒரே ரெத்த வெள்ளம். ஒங்க பேரச் சொல்லி பொண்ணு பரி தாபமாக் கதறினதை நான் ஏங்கா தால கேட்டேன். இப்பதான் ஆசுபத் திரிக்குக் கொண்டு போராங்க. வெரசா ஓடுங்க!'' என்றுன்.

எனக்கு ஒன்றுமே தோன்ற வில்லே. உடுத்த உடையோடு ஓடி னேன்.

அவள் கொடுத்து வைத்தவள். எனக்கு முன்னரே வைத்திய பரி சோதனைகளிலிருந்து மட்டுமல்ல, இந்த உலகத்திடமிருந்தே விடை பெற்றுவிட்டாள்.

நல்ல மனிதர்கள் இரண்டுவகை யாம். முதலாவது இறந்தவர்கள்; மற்றது பிறவாதவர்கள். இந்த இரண்டு பேரையுமே இழந்த நான்.........??

[யாவும் கற்பனே]

# வாழ்த்துக்கள்

* எமது மன்றத்தின் பொருளாளரும்-காப்புறுதிப் பத்திரதாரர் சேவையளித்தற் பகுதி, பிரிவு 5 இன் பகுதித் தலைமை எழுதுவினைஞருமாகிய **நசீம் பிஸ்தாமி அவர்கள் ரிஸ்னி மசூத் அவர்களை** 20.5.72-ல் திருமணம் செய்துகொண்டார். மணமக்களுக்கு எங்கள் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

* எமது மன்றத்தின் முன்னைய செயலாளரும்-உப தலைவரும், தற்போதைய செயற்குழு உறுப்பின ருமாகிய **திரு. மா. கந்தசாமி** சாட்டார் இன்சூரன்ஸ் (A.C.I.I.) பரீட்சையில் சித்தியடைந்தமையிட்டு இவருக்கு எங்கள் உளம் கனிந்த வாழ்த்துக்கள்!

* எமது மன்றத்தில் சென்ற வருடம் உபபொருளாளராகக் கடமையாற்றிய **திரு. டி. ஈ. தர்மதேவா** 30.6.72-ல் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சேவையிலிருந்து விலகி சார்ட்டட் அக்கவுண்டன் மாணவராகச் சேர்ந்துள்ளார். அவரின் எதிர்காலம் சுபீட்சமுற எங்கள் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!

மஹாகவியின்

# நினைவாஞ்சலி

வானம் ஓடிக்கறுக்கும் ஓர் காலையில்
வைகறைகள் பிறக்கும் ஓர் மாலையில்
போன கால்கள் சறுக்கும் ஓர் பாதையில்
பொலிவு கொண்டு சிறக்கும் ஓர் வீதியில்
கானகத்தை நிகர்க்கும் ஒரு துறை
ககன வாழ்வை ஒறுக்கும் ஒருநிலை
தீ நிகர்த்துச் சுடும் குளிர்வித்திடும்
தித்திக்கும், கசக்கும் பல உற்றனன்.

ஆட்டம் போட்டும் குலுக்கிய வண்டியோ
அவதிப்பட்டுக் களைத்துப் பறந்தது,
மேட்டைக் கண்டு துளைத்துப் புகுந்தது.
வெள்ளங் கண்டு வளைத்துக் கடந்தது.
நாட்டைச் சுற்றி நகைத்துத் திரிந்தது.
நகரில் சற்று நிறுததித் தொடர்ந்தது
வீட்டைத் தேடி அடையத் தவித்ததோ?
விழலுக் கோடி முடியத் துடித்ததோ?

ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவராகிய மஹாகவி நீங்காத் துயில் கொண்டு ஓராண்டு (20-6-72) பூர்த்தியாகி விட்டது. அவரின் ''ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்தி லிருந்து'' இருகவிதைகளை வெளியிடுவதன் மூலம் நாம் அவருக்கு நினைவாஞ்சலி செலுத்துகின்றோம்.

---

★ இலக்கியம் எல்லாக் கலைகளையும் போலவே மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்; குறிக்கோள்களையும், முயற்சிகளையும் தூண்டிவிட வேண்டும். முற்போக்குக்கு அநுசரணையாக வேண்டும். சமுதாய நீதி, மனிதத்துவம், சமாதானம் பெருகி நாடு முன்னேறத் துணைபுரிய வேண்டும்.

— ஐரிஸ் ஏர்வின்

★ நல்ல பெண் ஒருத்தியின் அன்பையும், ஆதரவையும் ஒருவன் பெற்று அவன் கழிநீர்க் கால்வாய் ஓரங்களில் கிடந்து கேவலமான வாழ்க்கை நடத்தி இறந்தாலும், அவன் வாழ்வில் வெற்றி கண்டவன் ஆவன்.

— இங்கர்சால்

# மாக்சிம் கார்க்கியின் இலக்கியப்பணி

— பொன்னழகன் —

சோசலிஷ யதார்த்தவாத இலக்கியத்தின் மூலவரும் — ரஷ்ய இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய காலக் கட்டத்தைத் தோற்றுவித்தவருமான மாக்சிம் கார்க்கி இலக்கியத்துக்கு ஆற்றிய பணியானது 19ம் நூற்றுண்டின் தலை சிறந்த இலக்கியத்திற்கும், புதிய சோவியத் இலக்கியத்திற்கும் இடையே உயிர்துடிப்புள்ள ஒரு தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. கடினமான உடல் உழைப்பையும், கொடிய வறுமையையும் இளமையிலிருந்தே தன் சொந்த வாழ்க்கையில் அனுபவித்த கார்க்கி சமுதாய மக்களின் துன்ப — துயரங்களையும்— சமுதாய நீதிக்கான நெறிமுறைகளையும் காணத்துடித்தார்; அதனுல் தமது சமுதாய நடவடிக்கைகளேயும் இலக்கியப் பணியையும் பாட்டாளி வர்க்கத்துடனும், லெனினின் மாபெரும் இலட்சியத்துடனும் இணைத்துக் கொண்டார்.

கார்க்கி எழுதிய கதைகள், ரஷ்ய நாட்டு வாழ்க்கையில் தோன்றிய ஒரு புதிய கட்டத்தின் தொடக்கத்தினையே தமக்கே உரிய விதத்தில் பிரதிபலித்தன. பின்னர் வரப்போகும் பேரெழுச்சியின் தன்மையை உணர்ந்து — எதிர்காலத்தைத் தீர்க்க தரிசனத்துடன் கூர்ந்தறிந்து கூறிய அவரது கால எழுத்தாளர்கள் யாவரிலும் கார்க்கியே முதன்மையானவர் எனின் மிகையாகாது.

போமோ கோர்தியேவ், மூவர் ஆகிய தொடக்ககால நாவல்களில் அன்றைய வாழ்க்கை முறையையும் — சமுதாய அநீதியையும் — கொடுமைகளையும் எதிர்த்து பல கண்டனக் குரல்களை எழுப்பி, தம் தம் சமுகச் சுற்றுச் சார்புகளைத் தகர்த்தெறிந்து கொண்டு வெளிப்படப் பாடுபட்ட கலகக்காரக் கதாநாயகர்களைச் சித்திரித்தார். இவற்றின் பின் வெளியிடப்பட்ட — உலகில் மிகவும் பிரபல்யமாக விளங்குகின்ற 'தாய்' என்ற நாவலில் தனிநபருக்கும் - சமுதாயத்திற்கும் இடையிலே ஒரு புதிய உறவினைச் சித்திரித்தார். இந்த நாவலில் தனிநபர், சமுதாயத்திற்காகப் போராடவில்லை. மாருக, விழிப்புணர்ச்சி நிலையை ஏற்கனவே பெற்று விட்ட மக்கள் 'கூட்டுக் கதாநாயக' இடம் பெற்று விட்டனர். மக்கள் எவ்வாறு தம்மோடு நெருங்கி பிணைந்து நிற்கும் தலைவர்களை — கதாநாயகர்களை உருவாக்குகின்றனர் என்பதை மிகப் பெரும் மனோதத்துவ நுட்பத்தோடும் — திறமையோடும் வெளிப்படுத்தியுள்ளார். இந்நாவல் கார்க்கியை ''சோசலிஷ யதார்த்தவாத இலக்கியத்தின் தந்தை''யாக்கி விட்டது. சமுதாய நீதி — சுதந்திரம்—சமா

தானம் ஆகியவற்றின் அடிப்படையில் இலக்கியப்பணிபுரியும் இளம்-யதார்த்தவாத எழுத்தாளரிடையே கனதியானதும்-ஆற்றல் மிக்கதுமான தாக்கத்தினை ஏற்படுத்திவிட்டது.

பிரமச்சாரியின் டைரி, மூன்று தலைமுறைகள் கிளிம்சாம்கின் வாழ்க்கை ஆகிய பிற்கால நாவல்கள் ரஷ்ய நாட்டின் சகல பகுதி மக்களின் சமுதாய வாழ்க்கையில் — அவர்களின் நலன்களையும், லட்சியங்களையும், போராட்டங்களையும் கருத்தில் கொண்டு பரந்த சமுதாயச் சித்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளன.

இவர், நாவல்களை மாத்திரமன்றி சிறுகதைகளையும், சிலநாடகங்களையும், சுயசரிதைக் குறிப்புக்களையும், பல சித்தாந்தக் கட்டுரைகளையும் எழுதி இலக்கியப்பணிபுரிந்துள்ளார். கார்க்கியின் எழுத்துக்கள் முழுவதிலும் உழைப்பிற்கும்—கலாச்சாரத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பையும் — கலாச்சாரப் படைப்பில் பொதுமக்களின் செயலூக்கம் மிக்க பாத்திரத்தையும் வலியுறுத்துகின்றார். கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான படைப்புத் தாக்கமானது நாட்டையும் — நாட்டு மக்களையும் — அவர்கள் விடுதலைக்காக நடத்தும் போராட்டத்தையும் உளமார நேசிக்கும் பண்போடு இணைந்திருக்க வேண்டுமென்ற கருத்துக்கொண்டவர். ''கலைஞன் என்பவன் தனது நாட்டை வேறு எந்தவொரு நபரைக் காட்டிலும் மிகவும் ஆர்வத்தோடும்— விவேகத்தோடும் நேசிக்கின்ற நாட்டின் தவப் புதல்வனாக எப்போதும் இருந்திருக்கிறான், இருப்பான் என்பதே எனது கருத்து. விடுதலையில்லாமல், கலையும் — கலாச்சாரமும் இல்லையென்பதை வேறு எவரைக்காட்டிலும் அவன் சிறந்த முறையில் அறிந்திருப்பான். எனவே தனது நாட்டின் துன்ப-துயர நாட்களின் போது அவன் தனது மக்களின் வீராவேச உணர்வையும், இதயத்தையும், மனத்தையும் கிளர்ந்தெழச் செய்ய முயன்றாக வேண்டும்'' என்கிறார் மாக்சிம் கார்க்கி.

பிரபல சோவியத் எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய், "கார்க்கியைப் போல் வரலாற்றின் புரட்சிகர சகாப்தங்களை ஆழமாகவும் நேர்மையாகவும் பிரதிபலித்த ஒரு கலைஞர்" என கார்க்கியின் மறைவின் போது அவரின் மாண்பினை - எழுத்தாளன் என்ற ரீதியில் அவரின் சிறப்பினைப் புகழ்ந்துள்ளார். ரஷ்ய நாட்டு இலக்கியத்திற்கு மாத்திரமன்றி உலக இலக்கியத்திற்கே ஒரு புதிய கண்ணோட்டத்தையும், அணுகல் முறையையும் உருவாக்கித் தந்தவர் மாபெரும் எழுத்தாளரான கார்க்கி எனின் மிகையாகாது. இது அவரது மாபெரும் இலக்கியப் பணியாகும். [''தாமரை'' — ஏப்ரல் 72 இதழில் வெளிவந்த மாஸ்கோ இலக்கியக் கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டது.]

---

* எமது தமிழ் இலக்கிய மன்ற வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட முன்னைநாள் தலைவர் [redacted]. வே. அ. திருஞானசுந்தரம் அவர்கள் நிர்வாக அதிகாரியாக பதவி உயர் பெற்றமையையிட்டு பெரு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

* எமது மன்றப் போஷகரான [redacted]. ஆர். எஸ். அன்ரனி அவர்கள் பகுதித் தலைமை எழுது வினைஞராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

# பூச்சியம் தானா?

வே. கா. தேவதாசன்

இணைபிரியாத இருசோடி மனித உருவங்களின் இன்பப் பிணைப்பால் இறங்கி வந்தேன் இப்பூவுலகுக்கு. என்னைத் தொடர்ந்து வந்தான் ரகு. புதியவர்களின் வருகையின்றி புரண்டு சென்றது எங்கள் வாழ்க்கைப் பகுதியின் ஓர் பத்து ஆண்டுகள். அடுத்த ஆண்டு அதன் வரலாற்றுக்கே புதிய ஒரு மெருகைக் கொடுக்க வேண்டும் என்பதைப் போல பெற்றவள் எம்மைப் பித்துக் கொள்ளச் செய்யும் பொருட்டு நித்தியத் துயிலில் ஆழ்ந்து விட்டாள், எமது பிஞ்சு வயதினிலே பஞ்சாகப் பறந்த அவள் கொஞ்சு மொழி பேசும் பிஞ்சுக்குழந்தை ஒன்றை மிக்கவிட்டுச் சென்றாள். பிறக்க வைத்த இறைவன் அதை வண்ணமொழிபேச வைக்க ஏனோ விரும்பவில்லை. உள்ளக் கடலின் குமுறல்களையும், இதய தாபங்களையும், உருவகம் கொடுத்து, எண்ண மூச்சுக்களை எல்லாம் வண்ணப்பேச்சுக்களில் வடிக்கும் வகை தெரியாது பிறந்த தங்கை பந்தங்களால் என்னைப் பிணைக்க வந்தது போலும். ஆசைத் தங்கை, பாசத்தங்கை, பாசக்கங்கையாக வேண்டியவள் பேசாத நங்கையானாள்.

வாழ்க்கை வட்டம் நமது வாழ்க்கைப் புழுதியில் மேலும் ஒரு ஆறு வருடங்களை வண்ண ஓவியங்களால் கீறிவிட்டு மறைந்தது. அந்தத் துள்ளும் வயதில், என் இதயத்தை முள்ளாகக் கீற தந்தையையும் கிள்ளி எடுத்துவிட்டான் கொடிய கால தேவன். திகைத்தேன்; திணறினேன்; செய்வதறியாது சிந்தித்தேன். வஞ்சகமும் போலிவாழ்க்கையும் கொண்ட இப்புவியை என் ஊனக்கண்களால் பார்க்கின்றேன். கொடிய உலகில் மனிதர்களாக — இல்லைப் பொம்மைகளைப் போலாவது சகோதரங்களை வாழவைக்க வேண்டுமென்ற ஒரே ஒரு நோக்கத்தினால் போய்ச் சேர்ந்தேன் புகையிலைக் கம்பெனியொன்றில். நான் நிறுத்திய படிப்பை, தம்பியைத் தொடங்க வைத்தேன். தங்கையை என்ன செய்வது? இடையில் நடந்தவற்றை எழுதினால் பகைவன் கூடக்கண்ணீர் வடிப்பான். எல்லாப் பரீட்சைகளிலும் முதலாவதாகத் தேறினான் தம்பி. முழுமூச்சுடன் நான் செய்யும் முயற்சிகளிலும், தம்பியின் எதிர்காலச் செழிப்பிலும் தானே வாயில்லாத் தங்கையின் வாழ்க்கையும் அடங்கியிருக்கின்றது என்பதை நான் நன்றாகப் புரிந்து கொண்டேன். அன்னையையும், தந்தையையும் இழந்து அனாதரவாகத்திரியும் பிள்ளைகளுக்கு ஒரு குறையும் வரக்கூடாது என்ற காரணத்திற்காக இரவு பகலென்று பாராது புகையிலைக் கம்பெனியில் உழைத்து ஓடான எனக்குஇருதய நோயும் பிடித்துக் கொண்டது. இதற்கிடையில் ரகு கொழும்பில் ஒரு அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் வேலையிலும் சேர்ந்து கொண்டான். தங்கையின் வாழ்வு மலரப் போகின்றது என்பதை என்னால் இன்பக்கண்

ணீரால் தான் காட்டிக் கொள்ள முடிந்தது. ''அண்ணு'' என்று அழைக்காத அவளிடமிருந்து ''மாமா'' என்றழைக்கும் மழலைமொழியைக் கேட்கலாம் என்றிருந்தேன். இப்படி நான் காணுத கனவுகளே இல்லை. நான் எண்ணியவை எல்லாமே சுக்கு நூருகியது. ஒரு சில மாதங்கள் தம்பியிடமிருந்து கடிதமே வரவில்லை. பணம்கூட அனுப்புவதாகக்காணும் அவனுக்கு நான் எழுதிய கடிதங்களுக்கோ பதில் இல்லை. சடுதியாக ஒருதடவை வீட்டுக்கு வந்திருந்தான் அவன்மீது சந்தேகம் கொண்ட நான் பெட்டியைச் சோதனை போட்டேன். எனக்குக்கிடைத்த பொக்கிசம் என்னைத் திக்குமுக்காடச் செய்தது. ஒரு கடிதம் தான் அது.

அன்புள்ள அத்தானுக்கு,

நலம்; நலம் அறிய அவா,

29-ம் திகதி அத்தானுக்குமறந்து போயிருக்காது. எதற்காக உங்களிடம் விரும்பிச் சங்கிலியைத் தொடுக்கச் சொன்னேன். பின்னுல் வரும் குழப்பம் தெரிந்தோ என்னவோ? அதைப் போட்ட அன்றே துக்குறி போல் எவ்வளவு நடந்துவிட்டது. அதைத்தொடர்ந்து வந்த பிரச்சனைகளுக்கு அதுதான் காரணமாக அமைந்தது. வாழ்க்கையில் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை. ஆனுல் அந்த நொடிப் பொழுதில் உங்களுடைய உடமையாகிவிட்டேன். ஊரறிய என்னைத் திருமணம் செய்யாமல் இருக்கலாம். உங்களுடைய உள்ளமறிய உவந்துதானே இந்த மாலையைத் தொடுத்தீர்கள். உங்களுடையசொந்தம் என்று உறவாட என்னிடம் சங்கிலி கூட இல்லை. எனக்கும் உங்களுக்குமிடையே நடந்த இந்தக் காந்தர்வ விவாகத்திற்கு நிலவுதான் சாட்சி! நிலவு வருமா சாட்சி சொல்ல?

நான் தான் நயவஞ்சகி; விஷப்பாம்பு. அமைதியான உங்கள் வாழ்க்கையில் புயல்போல வந்து நுழைந்த பாதகி. எனக்கு இதற்கு மட்டும் மன்னிப்பே கிடைக்காது. எங்கிருந்தோ வந்தவள் தானே? குறைந்தபட்சம் எண்ணம் சரிவராதுவிடில் திரும்பி விடுவாள் என்று மட்டும் கற்பனை கூடச் செய்துபார்க்காதீர்கள். இறைவன் படைப்பில் தான் எத்தனை விந்தை. எங்கோ பிறந்தேன்; பெண்மை இழந்து வந்தேனே ஒரு தெய்வத்தைக் காண. ஏதோ எல்லாம் சொல்லி உங்களை மயக்கி என் வலையில் வீழ்த்தி விட்டேன். அதன் பின் உங்களுக்கும் — உங்களுடைய குடும்பத்தின் கண்ணியமான வாழ்விற்கும் பங்கம் விளைவித்துவிட்டேன். உறவு முறிந்துவிட்டதோ என்ற நிலையில் மீண்டும் நெருங்கி உங்களை வதைத்து, என் துன்பத்தில் பங்கு கொடுத்து எல்லோருடைய வசைக்கும் ஆளாக்கிவிட்டேன். என் வாழ்க்கையில் உயர்ந்த உள்ளங்கொண்ட உங்களுடன் கழிக்கநான் பாக்கியவதி தான். எனக்கு வாழ்வளிக்க முன் வருவீர்கள் என்று இந்த அபலை மீண்டும் எழுதுகின்றேன். அன்பு அழியாதது; அன்பிற்கு முன் தீமை வலிமை குன்றும்.........

தம்பி திரும்பிப் போய்விட்டான்' ஒரு சில நாட்களில் இந்தப் பெண்ணுடனேயே வேறு தனிக் குடித்தனம் நடத்தி வருவதாகவும் அறிந்தேன்.

உன் இன்பவாழ்வுக்குக் குறுக்கே நான் நிற்கவில்லை; அதைத் தடுக்க உரிமையும் இல்லை. நீ எனக்கொரு உதவியும் செய்ய வேண்டாம். இப் பரந்தஉலகில் ஆண்டவன் கொடுத்த அவயங்களால் உழைத்து ஒரு கோடி யில் என்ஞல் வாழமுடியும். ஆஞல் தங்கைக்கு உன் உதவி தேவை. அவளை வாழ வைத்துவிடு. வாய் திறந்து பேச முடியாத அவள் இதயத் திலே இரத்தம் ஓடவிடாதே அவளில் லாதுவிட்டால் உனக்குப் பட்டம்–பதவிதான் வருமா? அவளை வாழ வைப்பதற்காகத் தானே உன்னைப் படிக்கவைத்தேன். என்னை மாடாக்கி என் உடலை ஓடாக்கி உன்னை இந் நிலை யில் காண்பதற்காகவா? உனக்கொரு கற்பில்லாதவள் தானு மனைவியாக இவ்வுலகில் கிடைக்க வேண்டும். மரி யாதைபோய், மானம்போன குடும் பத்தில் தங்கையை வரன்கொள்ள யார் வருவார்கள். தம்பி எத்தனை நாளைக்கடா, புகையிலை வேலை தந்த காசநோய் பிடித்த என் வாழ்க்கை இவ்வுலகில்? இன்ருே நாளையோ என் உயிர் பிரிந்துவிடும். உறைந்த உயிர்க் கூட்டின் அருகே விம்மி, விம்மி நிற் கப் போகிறதேயொரு வாயிலி. ஐயோ தம்பி! நினைக்கவே பயங்கர மாக இருக்கின்றதே. தங்கையின் கழுத்தில் மாங்கல்யம் ஏறியபின் நீ ஏதாவதுசெய்திருக்கலாமே! சொந்த பந்தம் இன்றியே தம்பியின் தொடர் புமின்றியே வாழ்க்கை அசைகின்றது.

வீட்டுக்கு நான் வரும்போதும் – வாசலில் இப்போதும் தங்கை நின்று வரவேற்கின்ருள். என் கண்களில் அவள் முகம்படும்போது அகக் கண் கள்குளமாகின்றன. இது தொடர்ந்து நடைபெறுகின்றது. இதுவரை கிடைத்தபலன் பூச்சியம்தான்!

# பிறந்த மண் அழுகிறது

"கார்வண்ணன்"

என்றும் இல்லாததுபோல் என் மனம் குழம்பிக் கிடக்கின்றது. இந்தக் குழப்பத்திற்குத் தீர்வு காணவேண்டுமானுல் ஊர் எல்லையிலுள்ள வயல் வெளிக்குச் சென்றுவிட வேண்டியது தான்! அழகன் முருகன் ஆலயமும், வானளாவி நிற்கும் அதன் கோபுரமும், தீர்த்தக்கிணறும் இதயத்திற்கு இதம் தருவன. இவற்றை அடுத்தாற் போல் சுமைதாங்கி மடம்; மடத்திற்கு முன்னுல் கேணி; விரிந்துபரந்து கிடக்கும் வயல் வெளியும்—தொடு வானமும். இன்றைக்கெல்லாம் இந்த மோனத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். எனது மனச்சுமையை இந்த எல்லையில்லாப் பெருவெளியில் கரைத்துவிடலாம். மடத்தின் தூண் ஒன்றிற்கு முதுகு கொடுத்து உட்காருகிறேன். கேணியில் நீர் நிரம்பியிருக்கிறது; தாமரை மலர்ந்து சிரிக்கிறது; தவளை தத்தி நீரைக் கலக்குகிறது. என் இதயமும் கலங்குவதேன்?

வக்கில் சாமாவின் மகன் சின்னு இன்றைக்கு லண்டன் சீமைக்குப் போகிருன், இயந்திரவியல் பயிலப் போகிருனும். பேஷாகப் போகட்டுமே! எனக்கென்ன வந்துவிட்டது? சின்னுவும் நானும் பள்ளித்தோழர்கள் ஊர்த்திண்ணைப் பள்ளியில் ஒன்ருகவே படித்தவர்கள். பாடசாலைநாட்கள் தாம் எத்துணை இனிமையானவை? பள்ளிக்கூடம் என்ற பெயரில் தென்னேலை முகட்டைத் தாங்க மாட்டாமல் தாங்கி நிற்கும் மரத் தூண்கள்; அவற்றை வரையறைப் படுத்தும் மண்குந்து, வகுப்பறைகளைப் பிரிக்கும் இடைவெளி. நிரை நிரையாய் நீண்ட மேசைகள்—வாங்குகள், கரும்பலகை இத்தியாதி! இத்தியாதி!! கதிரையில் அமர்ந்து சின்னுவின் வரவையே எதிர் நோக்கி இருக்கும் "ஊசிக்குடுமி" வாத்தியார்! மூக்குக்கண்ணுடி அணிந்திருப்பினும் அதன் மேலாக அவர் பார்க்கும் தீட்சண்யமான பார்வை—வயிற்றை ஓர் கலக்குக் கலக்குகின்றது. சின்னுவும் நானும் செய்யாத திருகுதாளம் இல்லை; வாங்காத அடி இல்லை.

"ஏண்டா சின்னு, சுப்பையனை அடித்தாயாமே?"

"ஏறு—வாங்கு மேலே"

"அடே! சின்னு நீட்டடா கையை"

இப்படி ஒரே கட்டளைகளாகப் பிறப்பித்துக் கொண்டு நிற்கும் வாத்தியார் அவர் முன் சர்வமும் அடங்கி—ஒடுங்கி நிற்கும் நாம். எண்ணி ஐந்து வகுப்புப் படித்துவிட்டு, "படிப்பே உடம்புக்கு ஆகாது" என்று பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டேன். சின்னு பட்டணத்து உயர்நிலைப்பள்ளிக்குப் போனுன்.

இன்னும் நாலோ, ஐந்தோ வருடங்களில் சின்னுசார் வந்துவிடுவார்!

பெரிய அரசாங்க உத்தியோகம் கூடக் கிடைத்துவிடும். அப்புறம் நான் முந்தி நீ முந்தி என்று பெண் கொடுக்க பெற்றவர்கள் வரிந்து கட்டி நிற்பார்கள். ஜாம்! ஜாம்!! என்று கலியாணம் கூட நடக்கும் சின்னுசார் பட்டணத்துக்கோ — வெளியூருக்கோ—இல்லை வெளிநாட்டுக்கோ போய்விடுவார்.

''எங்கே போனுல் என்ன நல்லாய் இருக்க வேணும் முருகா''

என் மனம் பிரார்த்திக்கிறது. அதை ஆமோதிப்பதுபோல் கோவில் மணியடிக்க மெய்சிலிர்க்கிறது. இந்த மண்ணைகதி என்று நம்பி அதனைக் கிளறி வாழும் நான் லண்டனுவது, போவதாவது! நாயர் கடைப்பக்கம் போனுல் பத்திரிகை படிக்கலாம். எழுந்து நடக்கிறேன். சிந்தனையும் கூடவே தொடருகிறது.

கிராமத்திற்கு ஒரு வாசிகசாலை வேண்டுமென்று இராமய்யாமாஸ்டர் பெரிய முயற்சி எடுத்துக் கொண்டார். கூட்டம் போட்டுத் தன் திட்டத்தை விளக்கினுர். எங்கள் உற்சாகம் கரைபுரண்டது. நிதி திரட்ட முற்பட்டபோது தான் சிக்கல் ஏற்பட்டது. நன்கொடைதரும் தாராள உள்ளங்கள் ஊரில் இல்லாமற் போயிற்று. தருவதாக வாக்களித்தவர் சிலர் கூட வெளியூரிலே தொழில் புரிபவர்கள். வாசிகசாலை ஆரம்ப ஆதரவு கூட இல்லாமல் நொடித்துப் போயிற்று. இல்லாவிட்டால் நாயர் கடையை நோக்கி நான் நடக்க வேண்டி வந்திராது.

உலகச் செய்தி முதல் உள்ளூர்ச் செய்திவரை அலசி ஆராயப்படும் கேந்திரஸ்தாபனம் நாயரின் தேனீர்க் கடை. இதனுலோ என்னவோ நாயர் கடைத்தேனீர் அலாதி ருசி உடையது.

குப்பனின் குடிசை கண்ணில்படுகிறது. கோழிகள் முற்றத்துமண்ணைக் கிளறுகின்றன. தாழ்வாரத்தில் கட்டியிருந்த ஆடு கதறுகிறது. நாய் ஒன்று கோழிகளை விரட்ட கட்டியிருந்த சங்கிலியை உடைக்கப் பார்க்கிறது. இவற்றைப் பார்ப்பவர் இப்போது இங்கே இல்லை. ஒருநாள் இரவு குப்பனின் மனைவிக்கு நோவு கண்டது. ஊர்ப்பெண்கள் உதவினர். நோவு நிற்கிறதாகவே - பிள்ளை பிறக்கிறதாகவோ இல்லை. அயலூர் வைத்தியரோ ஐந்து கல் தொலைவில் இருந்தார். நகர வைத்தியசாலைக்குப் போகலாமென்றுல் அந்த அகால வேளையில் ஆகிறகாரியமா? வைத்தியரை அழைத்து வருவதற்குள் குப்பனின் மனைவி இறந்தே போனுள். குப்பன் அழுத அழுகையைப் பார்க்க வேண்டுமே. அது வாளாக என் இதயத்தைக் கிழித்தது. இத்தனைக்கும் முதலியார் மகன் சுப்பிரமணியன் ஒரு டாக்டர். டாக்டராய் இருந்தால் என்னலாபம்? சுப்பிரமணியன் பட்டணத்தில் அல்லவா டிஸ்பென்சரி நடத்துகின்றுன். இந்தப் பட்டிக்காட்டில் டிஸ்பென்சரியாவது, பிராக்டிசாவது? பட்டணத்துக்குப் போய் பெற்றோருக்குத் தந்தி கொடுத்து விட்டு வந்தான் குப்பன்.

சின்னு மட்டுமோ போனுன்? தர்மகர்த்தா மகன் பெரியதம்பி ஆபிரிக்காவில் ஒரு தேசமாம். சை...... பெயர் தொண்டைக்குழியில் நிற்கிறது..... நை ... நை ... நைஜீரியாவே தான். அங்கே பெரிய ஆபீசர்

பெரியதம்பி. மில்லர் சிவஞானத்தின் மகன் கலியாணசுந்தரம், போர்ணியோவில் பிரதம கணக்காளராம். இப்படி எத்தனை பேர் வெளிநாடுகளில் – வெளியூர்களில் இவர்களால் யாருக்கு என்ன லாபம்?

இந்தத் தபாலாபீசோ, டிஸ்பென்சரியோ, உயர்நிலைப்பள்ளியோ, குறைந்தபட்சம் ஒரு வாசிகசாலையோ இல்லாத இந்த ஊரில் குடியிருக்க அவர்களுக்குப் பைத்தியமா என்ன?

யார் எங்கு போய்ப் படித்தால் என்ன? எந்தப் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்தால் என்ன? எங்கள் ஊரை அது மாற்றிவிடப் போவதில்லை.

இந்த மண்ணை கதியென நம்பி வாழும் நான் ஒரு ஏழை. நான் அறிந்த நாள் முதல், இந்த நாயர் கடை, மக்கிரோட்டு, கோவில் கேணிக்கட்டு, மடத்தடி, வயல் என்பன எல்லாம் அப்படியே இருக்கின்றன. ஒவ்வொருவரும் தான் தான் முந்தியிருக்கப் பார்க்கிறார்களே அல்லாமல் தாங்கள் பிறந்த மண்ணை எண்ணிப் பார்க்கிறார்களா? இவர்களை எண்ணிப்பிறந்தமண் அழுகிறது?

---


- கால்களுக்குச் செருப்பு இல்லையே என்று கவலைப்பட்டேன், கால்களே இல்லாத மனிதனைக் காண்கின்ற வரையில்...

கரோல்ட் அப்பட்

- ஜாதிமுறை, சடங்குமுறை என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே ஜாதிமுறையை ஒழிப்பது சமதர்மத் திட்டம் தான்.

பேரறிஞர் அண்ணா

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன தமிழ் இலக்கிய மன்றத்திற்காக வெளியிடுபவர்: திரு ஏர்னஸ்ட் பொன்னையா (செயலாளர்), 288, யூனியன் பிளேஸ், கொழும்பு–2. ஆசிரியர் குழு: திரு. க. பொன்னையா, திரு. த. ஜெகநாதன், செல்வி தேவகி நடராசா.
அங்கத்தவர் விநியோகத்துக்கு மட்டும்.




*For Brighter Living*

USE

WORLD - FAMOUS

# Tungsram Bulbs

*Manufactured By:*

## Asian Electrical & Mineral Industries Ltd.

**411, Ferguson Road.**
**P. O. Box 1091**
**COLOMBO-15**

*Grams:* **Gloworm** *Phone:* **33943, 35431**

# வீரமுள்ள சிங்கம் காட்டிற்கு ராஜா
# வீர்யமுள்ள ஆடவர் வீட்டிற்கு ராஜா

W.F.A. Veerasingam



பாலியல் உணர்வைத் தருவதில் நிகரற்றது!

சல்லாப உல்லாசம் தருவதில் இணையற்றது!

Arul
Arul

அவரிடம் எனக்கு அலாதி பிரியம்! ஆனால் அவரிடம் அதை எப்படி சொல்வது? இது உங்கள் மனைவியின் அங்கலாய்ப்பு!

உலகில் வெளிவந்துள்ள தாதுபுஷ்டி லேகியங்களுக்கெல்லாம் மகுடம் ஞானசுந்தர வைத்திய சாலையின்

# ரிஷி அஜமாமிச லேகியம்

இவ்வுலக வாழ்க்கையில் விருப்பமில்லாது சஞ்சலமடைந்திருக்கும் நேயர்காள்! இழந்துபோன பலத்துக்கும், தளர்ந்துபோன நரம்புகளுக்கும் ஒரே வேளை "ரிஷி அஜமாமிச லேகியம்" சாப்பிட்ட பின்பு அதிக உற்சாகத்துடன் பலத்தைக் கொடுப்பதில் இதற்கு சமமாய் எதனைக் காட்ட முடியும்? ஆண்மைக் குறைவு, விரியமின்மை, மார்பு வலி, இரத்தக் கொதிப்பினால் உண்டாகும் பலவீனம், திருப்தியின்மை, துரிதஸ்கலிதம், பற்பல வாய்வு ரோகம், இடுப்பு வலி, கை கால் அசதி முதலிய கோளாறுகளை நீக்கி, மூளையை பலப்படுத்தி, உறுப்புக்களை பலப்படுத்தி, உடலுக்கு வலிமையையும், எடையையும் அதிகரிக்கச் செய்து, மார்பை விரிவடையச் செய்து உடற்கட்டைச் சீர்படுத்தி, கவர்ச்சிகரமான தோற்றத்தைத்தருகிறது. பாவித்த மாத்திரத்தில் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். உங்கள் மனைவியின் அங்கலாய்ப்பும் தீரும் வீரியமுள்ள ஆண் சிங்கமாக, வீட்டிற்கு ராஜாவாக திகழ்வீர்கள். பத்தியமில்லை.

45 நாள் - 90 வேளை டப்பி 1க்கு ரூபா 45/-
30 நாள் - 60 வேளை டப்பி 1க்கு ரூபா 32/-
15 நாள் - 30 வேளை டப்பி 1க்கு ரூபா 17/50

தபால் செலவு ரூபா 1-75.

ஆண்களின் இராஜ கருவிகளுக்கு வெளிப் பூச்சாக

# ரிஷி ஸ்தம்பன தைலம்

விலை ரூபா 4-00 தபால் செலவு ரூபா 1-75.

72 வருடம் வைத்திய உலகில் உண்மையான முறையிலான, நேர்மையான வைத்திய சேவை புரிவது எங்கள் ஸ்தாபனமே. ஆலோசனை இலவசம்.

# ஞானசுந்தர வைத்தியசாலை

187 செட்டியார் தெரு
கொழும்பு